சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
MCOP.No.149/2022

2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 25ம் நாள் மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.இ.மரியஅனிதா கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் நாகராஜன் (RW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவின் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் ஓட்டுநர் ஆவேன். மனுதாரர் தரப்பு 1வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

விபத்து நடந்த பின்னர் தற்போது வரை விபத்து மனுதாரரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று காவல் துறையிடமோ, எங்கள் நிறுனத்திடமோ மனு ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

விபத்திற்கு காரணம் என்னுடைய கவனக்குறை என்பதால் தான் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் நான்கு வழிச்சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் வந்தவரும் அதே திசையில்தான் சென்றார் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் நான்கு வழிச்சாலையில் கிழக்கு பகுதியிலிருந்து மேற்கு நோக்கி செல்ல வேண்டும் என்றால் சரிதான். மேற்கு நோக்கி செல்லும் போது தூத்துக்குடியிலிருந்து வாகனம் வரும் என்றும், அதனால் வாகனத்தை மெதுவாக இயக்க வேண்டும் என்றும் சொன்னால் சரிதான். நான் மெதுவாகத் தான் சென்றேன். விபத்து நடந்த இடத்தில் டிவைடர் உள்ளது என்றால் சரிதான். ஆனால் ஒரு பஸ் நின்று செல்லும் அளவிற்கு இடைவெளி விட்டு டிவைடர் இல்லை. எனது பஸ்சின் முன் டயர் மோதி விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. டயருக்கு முன்னால் உள்ள பகுதியில் வாகனம் மோதியது. ஓட்டுநர் இருக்கைக்கு கீழேதான் நான் சொன்ன மோதிய பகுதி உள்ளது என்றால் சரிதான். நான் திரும்பும் போது சைடு கண்ணாடியை பார்த்தாலோ, கீழே குனிந்து பார்த்தாலோ இருச்சக்கர வாகனத்தில் வருபவர் தெரியும் என்றும், நான் கவனிக்காமல் கவனக்குறைவாக திரும்பியதால் விபத்து ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. பெதுவாக அரசு வாகனங்களில் இன்டிகேட்டர் வேலை செய்யாது என்று சொன்னால் சரியல்ல. நான் பஸ்சை இன்டிகேட்டர் போடாமலும், சைகை காட்டாமலும் திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், என்னுடைய கவனக்குறைவை மறைப்பதற்காக பேருந்து திரும்பும் அளவு இடைவெளி இல்லாமல் டிவைடர் போடப்பட்டது என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றும்

சொன்னால் சரியல்ல. நான் நஷ்டஈடு வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக நிர்வாகத்திற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.